தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
Website: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 167/மா/2025**

**நாள்: 04.08.2025**

| | | |
|---|---|---|
| திரு. M. பெரியசாமி<br>தூத்துக்குடி | --- | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர்<br>தூத்துக்குடி மாநகராட்சி | --- | எதிர்மனுதாரர் |

தூத்துக்குடி, மீளவிட்டான் ரோடு, VMS நகர் தெற்கு, கதவு எண்.1D/268 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M.பெரியசாமி என்பவரின் 25.04.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.04.2025 அன்று பெறப்பட்டு, 167/மா/2025 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

தூத்துக்குடி, மீளவிட்டான் ரோடு, VMS நகர் தெற்கு, கதவு எண்.1D/268 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M.பெரியசாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகாரினை தெரிவித்துள்ளார்:-

"நான் தமிழ்நாடு நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோக பணி விதிகள் 1970ன்படி அரசு ஆணை எண்.811, RDLA நாள் 10.06.1978–ன், கல்வித்தகுதியின்படி (SSLC Passed I.T.I Plumber Trade) கடைநிலை பணியாளராக பணிபுரிந்த நான் தூத்துக்குடி நகராட்சி/ மாநகராட்சி குழாய் ஆய்வாளராக (Tap Inspector) தூத்துக்குடி நகராட்சி ஆணையர் அவர்கள் செயல்முறைகள் இ2/15867/95 நாள் 18.08.1995ல் பணி மாற்றம் மூலம் பணியில் சேர்ந்து மொத்தம் 39 ஆண்டுகள் பணிபுரிந்து 31.05.2015ல் பணி ஓய்வு பெற்றுள்ளேன்.

அரசு ஆணைகள், அரசு கடிதங்கள், ந.நி. இயக்குனர் அவர்களின் தெளிவுரைகள் மற்றும் மாநகராட்சி ஆணையர்களின் செயல்முறைகள்படியும் நான் அரசு அறிவித்துள்ள புதிய ஊதிய விகிதம் பெற தகுதியானவராக உள்ளேன். (SSLC Passed & I.T.I Passed certificate).

இதன்படி 13.02.2025, 25.02.2025 மற்றும் 10.03.2025 நாளிட்ட எனது விண்ணப்பங்கள் வாயிலாக திருத்திய ஊதிய விகிதம் 18.08.1995 முதல் 31.05.2015 வரை நடைமுறைப்படுத்தவும், 01.06.2015 முதல் நடப்பு 2025 வரை ஓய்வூதியத்தை திருத்தம் செய்யவும், 01.04.2013 முதல் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் தெளிவுரை ந.க. எண் 1742/2021/F3 நாள் 26.04.2022–ல் உத்தரவுப்படி பணப்பலன்கள் நிலுவைத்

தொகைகள் வழங்கக் கோரி தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு பதிவு தபால் மூலம் விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ளேன்.

மேற்படி விண்ணப்பத்தின் இணைப்பில் ஊதிய விகித திருத்தம், பென்சன் ஊதிய விகித திருத்தம், அதற்கான பிரேரணைகள், முன்மொழிவுகள் விபரம் Pay & Pension Calculation details, Arrear Calculation details பட்டியல்கள் இணைத்துள்ளேன்.

விண்ணப்பம் சமர்ப்பித்து, ஒருமாதமான பின்பும் ஒன்றும் நடக்காததால் மீண்டும் என் கோரிக்கையை நிறைவேற்ற கோரி நினைவூட்டு கடிதமும், குறுஞ் செய்திகள் வாட்ஸ் அப் மூலமாகவும் 07.04.2025ல் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு தகவல் தெரிவித்திருந்தேன்.

அதன் பின்பும் எவ்வித நடவடிக்கை எடுக்காத நிலையில் 16.04.2025 நாளிட்ட கடிதங்கள் மூலம், முதலமைச்சரின் தனிப்பிரிவு, ந.நி.ம.கு.வ. துறையின் முதன்மை செயலாளர், மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கும் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளேன்.

ஆனால், எனது விண்ணப்பங்களை பரிசீலனை செய்து நடைமுறைபடுத்தாமல் தூத்துக்குடி மாநகராட்சியில் காலம் தாழ்த்தி வருகின்றனர்.

உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையின் சிறப்பு இயக்குநர் அவர்கள் உத்திரவு கடிதம் எண்.015151/ந.த.3/2022, நாள் 26.07.2022ல் நடைமுறைப்படுத்தாமல் தூத்துக்குடி மாநகராட்சி பணியமைப்பு குழு எழுத்தர்களும், உள்ளாட்சி நிதி உடனிகழ் தணிக்கை துறை ஆய்வாளர்களும் இந்த அரசாணைகள் & தெளிவுரைகளை சரியாக புரிந்துக்கொள்ளாமல் குழப்பிக் கொண்டு எனக்கு கிடைக்க வேண்டிய சலுகைகள், பயன்கள் கிடைக்க விடாமல் கால தாமதப்படுத்தி வருகின்றனர்.

ஏற்கனவே, தாம்பரம், சேலம், கோவை மாநகராட்சிகளிலும், திருப்பத்தூர் நகராட்சிகளிலும், மூன்றாம் நிலை நகராட்சிகளிலும் (அரசாணை எண் (ப) எண் 123 ந.நி.ம.கு.வ. துறை (நப3) நாள் 28.02.2011) என்னை போன்று பணிபுரிந்தவர்களுக்கு (Skilled Asst. Gr.I, II) ஊதிய விகித திருத்தம் மற்றும் ஓய்வூதிய திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த விபரங்கள் எனக்கு தெரிந்ததால் குறிப்பிட்டுள்ளேன். இன்னும் எண்ணற்ற பலர் பலனடைந்துள்ளார்கள். இன்னும் ஒரு சில மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் TWAD Board-லும் பல பணியாளர்கள் இந்த விகித ஊதிய விகிதம் ஏற்கனவே பெற்று பலன் பெற்றுள்ளனர்.

என்னுடன் பணியில் சேர்ந்த S.S.L.C. மட்டும் படித்துள்ள அமைச்சு பணியாளர்கள் பலர் நல்ல பதவி உயர்வுகள் பெற்று, நல்ல ஊதியம் பெற்று வரும் நிலையில் குடிநீர் விநியோக பிரிவில் இரவு பகல் பாராது அரசு விடுமுறை தினங்களிலும் பணி புரிந்து கூடுதலாக I.T.I. தொழிற் கல்வி படித்தும் எனக்கு எவ்வித பதவி உயர்வுகளும் உரிய ஊதிய விகிதம் கிடைக்க பெறாமலும் இருந்து வந்த நிலையில் அரசு அறிவித்துள்ள இந்த நல்ல உத்தரவுகளையும் அமுல்படுத்தப்படாமல் அலை கழித்து வரும் மாநகராட்சி நிர்வாகத்தைக் கண்டு மிகவும் மன வேதனை அடைந்துள்ளேன். இதற்கெல்லாம் முக்கிய காரணம் புரிதல் மற்றும் அனுபவம் இல்லாத பணியமைப்பு குழு அமைச்சு பணியாளர்களே காரணம்.

அரசாணை (நிலை) எண் 762 நிதி (ஊதியப் பிரிவு) துறை 20.08.1986–ல் ஆணை பிறப்பித்து 39 ஆண்டுகள் ஆகிறது. இந்த அரசு ஆணைக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் பல தெளிவுரைகள் வழங்கியும் இந்த அரசு ஆணையை முறையாக நடைமுறைப்படுத்தாமல் ஆளுக்கேற்றவாறு புரிதல் இன்றி குழப்பிக் கொண்டு இருப்பதால் ஏராளமான என்னைப் போன்ற தொழிற் நுட்ப பணியாளர்கள் (Skilled Asst. Gr.I, II)

பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் குடும்பம் படும் கஷ்டம் மிகவும் கஷ்டமானது வேதனைக்குரியது ஆகும்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சிறப்பாக செயல்படுவதை அறிந்து என் முறையீட்டை தங்களுக்கு சமர்ப்பித்துள்ளேன்.

எனக்கு வயது 68 ஆகிறது. மொத்தம் 39 ஆண்டுகள் பணிபுரிந்து வந்துள்ளேன். இந்த கோரிக்கைக்காக தூத்துக்குடி மாநகராட்சியில் பலமுறை அலைந்துள்ளேன். ஒன்றும் நடக்கவில்லை. என் மேல் கருணை கூர்ந்து எனக்கு கிடைக்க வேண்டிய ஊதிய விகித திருத்தம் (18.08.1995 முதல் 31.05.2015), ஓய்வூதிய திருத்தம் (01.06.2015 முதல் நடப்பு 2025 வரை) செய்து பணப்பலன்கள், நிலுவை தொகைகள் (01.04.2013 முதல்) விரைவாக கிடைக்கவும், அது எனக்கும், என் குடும்பத்தினருக்கும், என் வாழ்நாளில் பயன்படவும் இருப்பதற்கு தாங்கள் ஆணையிட மிகவும் தாழ்மையுடன் வேண்டுகிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 23.05.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் தன்னுடைய 15.07.2025 நாளிட்ட கடிதம் ந.க. எண் எண் இ1/788/2025–ன் அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

"அரசாணை (நிலை) எண்.762 நிதி (ஊ.கு.) துறை நாள் 20.08.1986, அரசாணை (நிலை) எண்.586 நிதி (ஊ.கு.) துறை நாள் 01.08.1992, அரசாணை (நிலை) எண்.162 நிதி (ஊ.கு.) துறை நாள் 13.04.1998, அரசாணை (நிலை) எண்.234 நிதி (ஊ.கு.) துறை நாள் 01.06.2009, அரசாணை (நிலை) எண்.338 நிதி (ஊ.கு.) துறை நாள் 26.08.2010, அரசு கடிதம் எண் 63305/ஊ.கு./2010–1, நாள் 08.11.2010, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட சென்னை மாநகராட்சி ஆணையர் கடிதம் 24376/மாந.6/2011–1 நாள் 03.10.2011, தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் செயல்முறை ஆணை ந.க. எண் 15876/2009/இ2 நாள் 02.02.2012, சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க. எண் 1742/2021/எப்3 நாள் 20.04.2022, திரு. மு. பெரியசாமி, செயல்திறன் உதவியாளர் நிலை 1 (ஓய்வு) விண்ணப்பம் நாள் 13.02.2025 (PPO No.196/2015), தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் ந.க. எண் இ1/788/2025 நாள் 08.05.2025, துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, தூத்துக்குடி மாநகராட்சி தணிக்கை அவர்களின் கடிதம் ந.க. எண் அ1/192/2025 நாள் 05.06.2025 ஆகிய அரசாணைகள் மற்றும் கடிதத்தின்படி தூத்துக்குடி மாநகராட்சியில் பணிபுரிந்து 31.05.2015ல் பணி ஓய்வு பெற்ற திரு. மு. பெரியசாமி, குழாய் ஆய்வாளருக்கு (செயல்திறன் உதவியாளர் நிலை–1) கீழ்க்காணும் விவரப்படி ஊதியம் மறு நிர்ணயம் செய்திட கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண் | ஊதிய விபரம் | ஊதிய விகிதம் |
|---|---|---|
| 1. | 18.08.1995ல் குழாய் ஆய்வாளர் பதவி உயர்வு | ரூ.1100 / (1100–25–1150–30–1660) |
| 2. | 01.01.1996ல் திருத்திய ஊதிய நிர்ணயம் | ரூ.4000 / (4000–100–6000) |
| 3. | 01.07.1996 ஆண்டு ஊதிய உயர்வு | ரூ.4100 / (4000–100–6000) |
| 4. | 01.07.1997 ஆண்டு ஊதிய உயர்வு | ரூ.4200 / (4000–100–6000) |
| 5. | 01.07.1998 ஆண்டு ஊதிய உயர்வு | ரூ.4300 / (4000–100–6000) |
| 6. | 01.07.1999 ஆண்டு ஊதிய உயர்வு | ரூ.4400 / (4000–100–6000) |
| 7. | 01.07.2000 ஆண்டு ஊதிய உயர்வு | ரூ.4500 / (4000–100–6000) |

| | | |
|---|---|---|
| 8. | 01.07.2001 ஆண்டு ஊதிய உயர்வு | ரூ.4600 / (4000–100–6000) |
| 9. | 01.07.2002 ஆண்டு ஊதிய உயர்வு | ரூ.4700 / (4000–100–6000) |
| 10. | 01.07.2003 ஆண்டு ஊதிய உயர்வு | ரூ.4800 / (4000–100–6000) |
| 11. | 01.07.2004 ஆண்டு ஊதிய உயர்வு | ரூ.4900 / (4000–100–6000) |
| 12. | 01.07.2005 ஆண்டு ஊதிய உயர்வு | ரூ.5000 / (4000–100–6000) |
| 13. | 18.08.2005ல் தேர்வு நிலை ஊதியம் | ரூ.5000 + 100PP / (5000–150–8000) |
| 14. | அ.ஆணை (நிலை) எண் 234 நிதி (ஊ.கு.) துறை நாள் 01.06.2009ன்படி 01.01.2006ல் ஊதிய நிர்ணயம் (பணப் பயன் 01.01.2007 முதல்) | 5100 x 1.86 = 9490<br>தர ஊதியம் = 2600<br>மொத்தம் = 12090 / (5200–20200+2600 GP) |
| 15. | 01.07.2006 ஆண்டு ஊதிய உயர்வு | ரூ.12460 / (5200–20200+2600 GP) |
| 16. | 01.07.2007 ஆண்டு ஊதிய உயர்வு | ரூ.12840 / (5200–20200+2600 GP) |
| 17. | 01.07.2008 ஆண்டு ஊதிய உயர்வு | ரூ.13230 / (5200–20200+2600 GP) |
| 18. | 01.07.2009 ஆண்டு ஊதிய உயர்வு | ரூ.13630 / (5200–20200+2600 GP) |
| 19. | 01.07.2010 ஆண்டு ஊதிய உயர்வு | ரூ.14040 / (5200–20200+2600 GP) |
| 20. | 01.07.2011 ஆண்டு ஊதிய உயர்வு | ரூ.14470 / (5200–20200+2600 GP) |
| 21. | 01.07.2012 ஆண்டு ஊதிய உயர்வு | ரூ.14910 / (5200–20200+2600 GP) |
| 22. | 01.07.2013 ஆண்டு ஊதிய உயர்வு | ரூ.15360 / (5200–20200+2600 GP) |
| 23. | அரசுக் கடித எண்63305/ஊ.கு/2010–1 நாள் 08.11.2010 மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க. எண்1742/2021/எப்3 நாள் 20.04.2022–ன்படி 01.01.2006ல் ஊதியம் மறு நிர்ணயம் (பணப் பயன் 01.08.2010 முதல்) | ரூ.13690 / (9300–34800+4200 GP) |
| 24. | 01.07.2006 ஆண்டு ஊதிய உயர்வு | ரூ.14100 / (9300–34800+4200 GP) |
| 25. | 01.07.2007 ஆண்டு ஊதிய உயர்வு | ரூ.14530 / (9300–34800+4200 GP) |
| 26. | 01.07.2008 ஆண்டு ஊதிய உயர்வு | ரூ.14970 / (9300–34800+4200 GP) |
| 27. | 01.07.2009 ஆண்டு ஊதிய உயர்வு | ரூ.15420 / (9300–34800+4200 GP) |
| 28. | 01.07.2010 ஆண்டு ஊதிய உயர்வு | ரூ.15890 / (9300–34800+4200 GP) |
| 29. | 01.07.2011 ஆண்டு ஊதிய உயர்வு | ரூ.16370 / (9300–34800+4200 GP) |
| 30. | 01.07.2012 ஆண்டு ஊதிய உயர்வு | ரூ.16870 / (9300–34800+4200 GP) |
| 31. | 01.07.2013 ஆண்டு ஊதிய உயர்வு | ரூ.17380 / (9300–34800+4200 GP) |
| 32. | 01.07.2014 ஆண்டு ஊதிய உயர்வு | ரூ.17910 / (9300–34800+4200 GP) |
| பணி ஓய்வு நாள் | | 31.05.2015 பி.ப. |

மேலும், தனியருக்கு ஊதியம் மறு நிர்ணயம் செய்வது குறித்து தூத்துக்குடி, துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை அவர்களிடம் தெளிவுரை வழங்க கோரப்பட்டதில், தெளிவுரை வழங்க வழிவகை இல்லை என்றும், நிர்வாக ரீதியாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தூத்துக்குடி மாநகராட்சி தணிக்கை, உள்ளாட்சி நிதித் தணிக்கை, துணை இயக்குநரின் கடிதம் ந.க. எண் அ1/192/2025, நாள் 05.06.2025–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தனியர் திரு. மு. பெரியசாமி, குழாய் ஆய்வாளருக்கு ஊதியம் மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை சரிபார்த்து தரும்படி கேட்டு துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, தூத்துக்குடி மாநகராட்சி தணிக்கை, தூத்துக்குடி அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 17.07.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 09.07.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. M. பெரியசாமி என்பவர் 17.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"நான் தமிழ்நாடு நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோக பணி விதிகள் 1970ன்படி அரசு ஆணை எண்.811 RDLA நாள் 10.06.1978 அரசாணையின் கல்வித்தகுதியின்படி (SSLC Passed I.T.I Plumber Trade) கடைநிலை பணியாளராக பணிபுரிந்த நான் தூத்துக்குடி நகராட்சி/ மாநகராட்சி குழாய் ஆய்வாளராக (Tap Inspector) தூத்துக்குடி நகராட்சி ஆணையர் அவர்கள் செயல்முறைகள் இ2/15867/95 நாள் 18.08.1995ல் பணி மாற்றம் மூலம் பணியில் சேர்ந்து மொத்தம் 39 ஆண்டுகள் பணிபுரிந்து 31.05.2015ல் பணி ஓய்வு பெற்றுள்ளேன்.

அரசு ஆணைகள், அரசு கடிதங்கள், ந.நி. இயக்குனர் அவர்களின் தெளிவுரைகள் மற்றும் மாநகராட்சி ஆணையர்களின் செயல்முறைகள்படியும் புதிய ஊதிய விகிதம் பெற தகுதியானவராக உள்ளேன். (SSLC Passed I.T.I Passed certificate) இதன்படி நான் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு 13.02.2025, 25.02.2025 மற்றும் 10.03.2025 சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்துடன் திருத்திய ஊதிய விகித Calculation List, பென்சன் திருத்தம் அதற்குரிய Arrear Calculation List உடன் உள்ள "பிரேரணைகளுடன் கூடிய முன் மொழிவுகள்" பட்டியல்கள் எனது விண்ணப்பங்கள் வாயிலாக திருத்திய ஊதிய விகிதம் 18.08.1995 முதல் 31.09.2015 வரை நடைமுறைப்படுத்தவும், 01.06.2015 முதல் நடப்பு 2025 வரை ஓய்வூதியத்தை திருத்தம் செய்யவும், 01.04.2013 முதல் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் தெளிவுரைகள் ந.க.எண்.1742/2021/F3 நாள் 26.04.2022 மற்றும் ந.க.எண்.38277/2024/மா.ந.அ–2, நாள் 20.01.2025 உத்திரவின்படியும் பணப்பலன்கள் நிலுவை தொகைகள் வழங்க கோரி தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு பதிவு தபால் மூலம் விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ளேன். ஆனால் இதுவரை எனது விண்ணப்பங்களை பரிசீலனை செய்து நடை முறை படுத்தாமல் தூத்துக்குடி மாநகராட்சியில் காலம் தாழ்த்தி வருகின்றனர்.

உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையின் சிறப்பு இயக்குனரின் கடிதம் எண்.015151/ந.த.3/2022 நாள் 26.07.2022ன்படி அவரது உத்திரவையும் நடைமுறைப்படுத்தாமல் தூத்துக்குடி மாநகராட்சி பணியமைப்பு குழு எழுத்தர்களும், உள்ளாட்சி நிதி உடனிகழ் தணிக்கை துறை ஆய்வாளர்களும் இந்த அரசாணைகள் மற்றும் தெளிவுரைகளை சரியாக புரிந்துக்கொள்ளாமல் குழப்பிக் கொண்டு எனக்கு கிடைக்க வேண்டிய சலுகைகள், பயன்கள் கிடைக்க விடாமல் காலம் தாழ்த்தி வருகின்றனர்.

எனக்கு வயது 68 நான் 39 ஆண்டுகள் பணிபுரிந்து வந்துள்ளேன். இந்த கோரிக்கைக்காக பலமுறை தூத்துக்குடி மாநகராட்சியில் அலைந்துள்ளேன். ஒன்றும் நடக்கவில்லை. தற்போது தூத்துக்குடி மாநகராட்சியால் எனது ஊதியம் மறு நிர்ணயம் தொடர்பாக 15.07.2025 நாளிட்ட கடிதம் வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும் இக்கடிதத்தில் ஆணை ஏதும் பிறப்பிக்கப்படாமல் உள்ளாட்சி நிதித்தணிக்கை துணை இயக்குநர் தூத்துக்குடி மாநகராட்சி தணிக்கை துறை அவர்களுக்கு தற்போது செய்யப்பட்டுள்ள ஊதிய மறு நிர்ணயம் சரி பார்த்து தரும்படி கேட்டுள்ளார்கள். இது காலங்கடந்த செயல் என்றாலும் எனது ஊதிய மறு நிர்ணயம் குறித்து விரைவில் ஆணை பிறப்பிக்குமாறு

தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

**6.** தூத்துக்குடி மாநகராட்சி இளநிலை உதவியாளர் **17.07.2025** அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

''மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டது. அரசாணைகள் மற்றும் அரசு கடிதங்களின்படி தூத்துக்குடி மாநகராட்சியில் பணிபுரிந்து **31.05.2015** பணி ஓய்வு பெற்ற திரு.மு.பெரியசாமி, குழாய் ஆய்வாளர், (செயல்திறன் உதவியாளர்) **18.08.1995** முதல் ஊதியம் கணக்கிடப்பட்டு **01.07.2014** ஆண்டு ரூ.17,910/–(ரூ.9,300–34800+4200 Grade Pay) என கணக்கிடப்பட்டுள்ளது. நிர்வாக ரீதியாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்படி தனியர் திரு.மு.பெரியசாமி, குழாய் ஆய்வாளருக்கு ஊதியம் மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை சரி பார்த்து தரும்படி துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, தூத்துக்குடி மாநகராட்சி தணிக்கை, தூத்துக்குடி அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இந்நேர்வு குறித்து உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை, தூத்துக்குடி மாநகராட்சி தணிக்கை – தொடர்பு கொண்டு, உரிய ஆணை விரைவில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

7. மனுதாரரின் மனு, மனுதாரரின் வாக்குமூலம் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் இளநிலை உதவியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன:

தமிழ்நாடு நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோக பணி விதிகள், **1970–க்கு** திருத்தம் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண் **811** RDLA, நாள் **01.06.1978–ன்** கல்வித்தகுதியின்படி (SSLC Passed I.T.I Plumber Trade) கடைநிலை பணியாளராக பணிபுரிந்து தூத்துக்குடி நகராட்சி/ மாநகராட்சி குழாய் ஆய்வாளராக (Tap Inspector) **18.08.1995**லிருந்து பணி மாற்றம் மூலம் பணியில் சேர்ந்து, ஆக மொத்தம் **39** ஆண்டுகள் பணிபுரிந்து **31.05.2015**ல் பணி ஓய்வு பெற்றுள்ளார் என்பதும், அரசு ஆணைகள், அரசு கடிதங்கள், நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் தெளிவுரைகள் மற்றும் மாநகராட்சி ஆணையர்களின் செயல்முறைகள்படியும் புதிய ஊதிய விகிதம் பெறுவதற்கு திருத்திய ஊதிய விகித Calculation List, பென்சன் திருத்தம், அதற்குரிய Arrear Calculation List உடன் உள்ள ''பிரேரணைகளுடன் கூடிய முன் மொழிவுகள்'' பட்டியல்கள் மற்றும் ஊதியம் திருத்தத்திற்குப் பின் **01.06.2015** முதல் நடப்பு **2025** வரை ஓய்வூதியத்தை திருத்தம் செய்யவும், பணப்பலன்கள் நிலுவை தொகைகள் வழங்கக் கோரி தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு பதிவு தபால் மூலம் விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ளார் என்பதும், இதுவரை மனுதாரரது விண்ணப்பங்களை பரிசீலனை செய்து நடைமுறைபடுத்தாமல் தூத்துக்குடி மாநகராட்சியில் காலம் தாழ்த்தி வருவதும், உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையின் சிறப்பு இயக்குனரின் **26.07.2022** நாளிட்ட கடிதத்தில் பிறப்பித்த உத்திரவையும் நடைமுறைப்படுத்தாமல் தூத்துக்குடி மாநகராட்சி பணியமைப்பு குழு எழுத்தர்களும், உள்ளாட்சி நிதி உடனிகழ் தணிக்கை துறை ஆய்வாளர்களும் அரசாணைகள் மற்றும் தெளிவுரைகளை சரியாக புரிந்துக்கொள்ளாமல் குழப்பிக் கொண்டு தனக்கு கிடைக்க வேண்டிய சலுகைகள், பயன்கள் கிடைக்க விடாமல் கால தாழ்த்தி வருவதாகவும், தூத்துக்குடி மாநகராட்சியின் **15.07.2025** நாளிட்ட கடிதத்தில் ஆணை ஏதும் பிறப்பிக்கப்படாமல் உள்ளாட்சி தூத்துக்குடி மாநகராட்சி நிதித் தணிக்கை துறை துணை இயக்குநரிடம் தற்போது செய்யப்பட்டுள்ள

ஊதிய மறு நிர்ணயம் சரி பார்த்து தரும்படி கேட்டுள்ளார்கள் என்பதும், இது காலங்கடந்த செயல் என்றாலும் தனது ஊதிய மறு நிர்ணயம் குறித்து விரைவில் ஆணை பிறப்பிக்குமாறு தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு மனுதாரர் கோரியுள்ளது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு, தூத்துக்குடி மாநகராட்சியில் குழாய் ஆய்வாளராக (செயல்திறன் உதவியாளர்) பணிபுரிந்து 31.05.2015 பணி ஓய்வு பெற்ற திரு.மு.பெரியசாமி என்பவருக்கு 18.08.1995 முதல் ஊதியம் கணக்கிடப்பட்டு 01.07.2014–ல் ஊதியம் ரூ.17,910/–(ரூ.9,300–34800+4200 Grade Pay) என கணக்கிடப்பட்டுள்ளது என்பதும், நிர்வாக ரீதியாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மேற்படி தனியர் திரு.மு.பெரியசாமி, குழாய் ஆய்வாளருக்கு ஊதியம் மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை சரி பார்த்து தரும்படி கோரி துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, தூத்துக்குடி மாநகராட்சி தணிக்கை, தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதும், இந்நேர்வு குறித்து துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, தூத்துக்குடி மாநகராட்சி தணிக்கை, தூத்துக்குடி அவர்களை தொடர்பு கொண்டு உரிய ஆணைகள் விரைவில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் இளநிலை உதவியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் கடைநிலை ஊழியராக பணிமாற்றம் மூலம் பணியில் சேர்ந்த நாளான 18.08.1995 முதல் பணி ஓய்வு பெற்ற நாளான 31.05.2015 வரையிலான காலத்திற்கு புதிய ஊதிய திருத்தத்தின்படி கணக்கீடு செய்யப்பட்டு, அதனை சரிபார்ப்பதற்காக துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, தூத்துக்குடி மாநகராட்சி தணிக்கை, தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பம் குறித்து, தூத்துக்குடி மாநகராட்சி இளநிலை உதவியாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு, துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, தூத்துக்குடி மாநகராட்சி தணிக்கை அவர்களை தொடர்பு கொண்டு அன்னாரின் அறிக்கையை பெற்று அதன் அடிப்படையில் மனுதாரருக்கு உரிய ஆணைகளை வழங்கிட, உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரத்தினை இவ்வுத்திரவு கிடைக்கப் பெற்ற மூன்று மாத காலத்திற்குள், இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறும் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 4–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. M. பெரியசாமி,
கதவு எண்.1D/268, VMS நகர் தெற்கு,
மீளவிட்டான் ரோடு,
தூத்துக்குடி–628 002.

(2) ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி,
தூத்துக்குடி.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

(4) இணை இயக்குநர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

செயலாளர்.